செ.குறிப்பு : 112 நாள் : 5.11.08

# பராக் ஒபாமா வெற்றி குறித்து முதலமைச்சர் கலைஞர் பாராட்டு.

தென் ஆப்பிரிக்கா சிறையில் 27 ஆண்டுகள் அடைபட்டிருந்து – விடுதலை பெற்ற நெல்சன் மண்டேலா அந்நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது "வெள்ளை இருட்டில் கறுப்பு நிலா" என்று வர்ணனை செய்து வாழ்த்தினேன்.

இதோ; உலக நாடுகளுக்கு எல்லாம் உச்ச நாடு என்று பெருமைப் பட்டுக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டில் அன்று ஆப்ரகாம் லிங்கன் கண்ட கனவு பலித்தது என்பது போல; அந்த ஆதிக்கபுரியில் அடிமை களின் தலைவனாக எழுந்த பராக் ஒபாமா பெற்றுள்ள பெருமித வெற்றி; – அடிமைப்பட்டிருந்த இனத்திற்கு இருள் நீக்கும் அருணோதயமாகவும் உலக வரலாற்றுக்கான ஒப்பற்ற முன்னுரை; கறுப்பு வண்ணத்தால் எழுதப்பட்டதுமான எழுச்சி முரசமுமாக அமைந்துள்ளது என மகிழ்கிறேன்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை